REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 113

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்

| உள்நாடு (இலங்கை உட்பட) | |
|---|---|
| ஆண்டு | ரூ 24—0—0 |
| 6 மாதம் | ரூ 12—0—0 |
| 3 மாதம் | ரூ 6—0—0 |
| வெளிநாடு: | |
| ஆண்டு | ரூ. 30—0—0 |
| 6 மாதம் | ரூ. 15—0—0 |
| 3 மாதம் | ரூ. 7—8—0 |

சென்னை: ஐப்பசி 7வ வெள்ளி (23—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 8வ சனி (24—10—53)

# பூரி தெய்வச்சிலைகள் வயிற்றில் மண்!

## உண்டை சோற்று பக்தர்களுக்கும் அதே கதி!

——(:)——

## ரூ. 1000 மதிப்புள்ள 'பிரசாதம்' — குழி தோண்டிப் புதைக்கப்பட்டன!

——(0)——

### மடைப்பள்ளி மடையர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் ஏற்பட்ட பிணக்கினால் வந்த தொல்லை

——(:)——

### பாழாக்கப்பட்ட சோற்றுக்கு யார் நஷ்டஈடு கொடுப்பதென்ற புதிய சிக்கல்!

பூரி ஜகநாதர் கோயில் மடப்பள்ளியில் உள்ள பரிசாரகர்களுக்கும், கோயில் 'மூர்த்தியை' அர்ச்சிக்கும் அர்ச்சகர்களுக்கும் ஏதோ சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது.

இந்தச் சிக்கலின் காரணமாக சென்ற திங்கட்கிழமை இரவு ஆராதனைக்குக் கொண்டு வரப்பட்ட ரூ. 1000 மதிப்புள்ள பிரசாதங்களை, 'தெய்வச் சிலை' ஏற்றுக்கொள்ளாது என்று கூறி அர்ச்சகர்கள் மறுத்துவிட்டனர். அந்தப் பிரசாதத்தை புதன்கிழமை குழி தோண்டிப் புதைத்தனர்!

பூரி, அக். 22—

இரு சாராருக்கும் ஏற்பட்டுள்ள பிணக்கு மேலும் நீளுகிறது. இதனால், பூரி ஜகநாதர் பட்டினியாகக் கிடக்கிறார் என்பதோடல்லாமல், அவரைக் கழுவிக் குளிப்பாட்டி ஆடை அலங்காரங்கள் கூட, செய்யப்படாமல் இருந்தாராம். புதன்கிழமை இரவு 10-மணிக்கு மேல் தான் அவருக்குத் திருமஞ்சனம் முதலிய சடங்குகள் தொடங்கப்பட்டு விடிய விடிய நடத்தப்பட்டதாம்.

கோயில் பெருச்சாளிகளுக்குள்ளாக ஏற்பட்ட இச்சிக்கலின் காரணமாக, ஜகநாதர் பட்டினியாகக் கிடப்பது ஒருபக்கம் இருக்க, கோயில் உண்டைக் கட்டிகளையே உணவுக்காகக் காத்துக் கிடந்த யாத்ரிகர்களையும் பட்டினி போடடார்களாம்.

இரு எத்தர் கூட்டத்தினரிடையேயும் ஏற்கனவே இருந்த தகராறே தீர்க்கப்படாமல் இருக்கும்பொழுது, மண்ணில் புதைக்கப்பட்ட ரூ 1000 மதிப்புடைய பிரசாதங்களுக்கு யார் நஷ்டஈடு கொடுப்பது என்று புதிய சிக்கலும் கூடி இருக்கிறதாம்.

### குபேர நாட்டினரால்......!

லண்டன், அக். 22—

ஐரோப்பாவுக்கு இவ்வாண்டில் விஜயம் செய்த அமெரிக்கர்கள் நான்கு லட்சம் பேர்கள் என்றும், இவர்கள் மூலமாக 48 கோடி டாலர் வருமானம் கிடைத்ததாகவும் புள்ளி விபரங்களிலிருந்து தெரிகிறது.

★★★★★★★★★★★★

### ஏழை பங்காளர்?

★

"வருமானத்திற்கு வரி செலுத்தாத எளியவர்களிடமிருந்து உணவுப் பண்டங்கள் மீது சிறிது வரி வாங்குவது அதிகமானதாகுமா?"

—மங்களூரில் நிதி அமைச்சர் சுப்ரமணியம்.

★★★★★★★★★★★★

## மதுரை தி. மு. கழகப் பொருளாளர் கிருஷ்ணசாமி உடல்நிலை

(பிரத்யேக நிருபர்)

மதுரை, அக். 23—

கடந்த 5—10—53 திங்கட்கிழமை பகல் 12-30 மணிக்கு, சில காங்கிரஸ் களபதிகளின் தாக்குதலால் பலத்த வெட்டுக்காயமடைந்த, மதுரை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளரும், செல்வம் பதிப்பக உரிமையாளருமான தோழர் எஸ். கிருஷ்ணசாமியின் உடல்நிலை குணமடைந்துவருகிறது; என்றாலும், காயங்கள் ஆற நாளாகுமென டாக்டர்கள் கூறியிருக்கின்றனர்.

## வைத்தியநாத அய்யரின் நரித்தனம் தலைதூக்குகிறது

### மதுரை காங்கிரஸ் களபதிகளின் புது ரகப் போர்!

மதுரை, அக். 25—

20-10-53 முற்பகல், சுமார் 11 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழகப் பிரமுகரும், நியூ ஸ்டுடியோ உரிமையாளருமான தோழர் பி. மதியழகன் அவர்களின் இல்லத்தில், வீட்டின் பின்புறமுள்ள காம்பவுண்டுக்குள், மலத்தை, மூன்று வாழை இலைகளுக்குள் வைத்து, பொட்டலமாகக் கட்டித் தூக்கி எறிந்துவிட்டு ஓடி விட்டார்கள்.

போலீசுக்குப் புகார் செய்தபின், போலீசார் அந்த இடத்தைப் பார்வையிட்டு அதில் சம்பந்தப் பட்டவர்களெனக் கூறப்பட்ட காங்கிரஸ் களபதிகளைக் கொண்டுவந்து விசாரித்துக் கொண்டிருக்கும் போது, தோழர் ஏ. வைத்தியநாதய்யர் அவர்கள் தலையிட்டு, டெலிபோன் மூலம் சொல்லியதின் பேரில், அவர்களின்மீது எவ்வித வழக்கும் பதிவு செய்யாமலே விட்டுவிட்டார்கள்.

ஆச்சாரியாரின் தி. மு. கழக ஒழிப்புப் போராட்டத்தில் இது இரண்டாவது அம்சம் என்று மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

### 320 நர்சுகள்: வேலையினின்று நீக்கப்படலாம்

சென்னை, அக். 21—

சென்னை நகரிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டிருந்த 320 நர்சுகளுக்கு, அடுத்த மாதத்திலிருந்து அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படலாமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அலுவல்களை மாற்றி அமைப்பதற்காகவும், ஆள் குறைப்பு செய்வதற்காகவும், அமுலுக்குக் கொண்டு வரும் திட்டத்தின் விளைவாக மேற்கண்டவாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

### முன்னாள் மன்னர்களுக்கு வருமான வரி

புது டெல்லி, அக். 22—

இந்தியாவிலுள்ள முன்னாள் மன்னர்களுக்கு, அலவன்ஸ் தவிர, மற்ற வழிகளில் அவர்கள் பெறும் வருவாய்க்கு, வரி விதிக்க, இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளது.

இந்திய யூனியனுடன் சமஸ்தானங்கள் இணைந்த காலத்தில், இந்திய சர்க்கார் அளித்த உறுதிமொழிகளை இந்திய சர்க்கார் மீறவில்லை யென்றே சொல்லப்படுகிறது.

இந்த ஆண்டிலிருந்து வரி கொடுப்பதா, இல்லையா என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

லண்டன், அக். 22—

கப்பல் கட்டும் தளங்களிலுள்ள $2\frac{1}{2}$ லட்சம் தொழிலாளர்கள், 15 சதவீத சம்பள உயர்வு கோரி, செய்துகொண்ட கோரிக்கையை முதலாளிகள் நிராகரித்து விட்டனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# தூத்துக்குடி வாரம்

### தி. மு. கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

★

1. நவம்பர் முதல் வாரத்தில், (1-ந் தேதி முதல் 8-ந் தேதிக்குள்) ஒரு நாள், "தூத்துக்குடி நாள்" என்று ஒரு கூட்டம் அவசியம் நடத்த வேண்டும்.
2. அந்தக் கூட்டத்தில், தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. நிறைவேற்றிய தீர்மானத்தை, "கனம். இராசகோபாலாச்சாரியார், முதல் மந்திரி, அரசாங்க மாளிகை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—9," என்ற முகவரிக்கு உடனடியாகத் தபாலில் அனுப்பி, நகலை, தலைமை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.
4. அன்றைய கூட்டத்திலேயே, தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, தோழர்களை விடுதலை செய்யும்படி சென்னைப் பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்று தயாரித்து, அதில், நூற்றுக்கணக்கான கையெழுத்துக்களை வாங்கி, தனியாகப் பிரதம மந்திரி 'முகவரிக்கு' அனுப்பி, கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையை தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகக் கிளையும் கட்டாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

'அறிவகம்,'
சென்னை,
23—10—53.

ஏ. கோவிந்தசாமி, எம் எல். ஏ.,
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## 36 ஆலைகள் 'மாற்று' வேலை முறையை ஒழிக்கின்றன!

### 34,000 தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு உலை

அகமதாபாத், அக். 22—

வட குஜராத் பகுதியில் உள்ள 36 நெசவாலைகளில், இரண்டாவது அல்லது மூன்றாவது 'மாற்று' வேலை முறையை நவம்பர் முதல் தேதியில் இருந்து ஒழித்துவிடுவது என்று ஆலை அதிபர்கள் முடிவு கட்டியுள்ளனர்.

இதன் விளைவாக 34,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவர்.

மாற்று வேலை முறையை நிறுத்திவைக்க முன்வந்திருக்கும் 36 ஆலைகளும், கலோல், காடி, சிதாபூர், புரோச், பரோடா, அகமதாபாத் ஆகிய நகரப் பகுதியில் உள்ளன.

8 ஆலைகளில் உள்ள 8000 தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் கொண்டுள்ள செங்கொடி தொழிற் சங்கம், இன்னும் பதினைந்து நாட்களுக்குள் 'மாற்று' வேலை முறையை ஒழிப்பதற்கான நியாயத்தை, தொழில் நீதி மன்றத்தில் மெய்ப்பிக்கவேண்டும் என்று, ஆலை அதிபர்களுக்கு அறிக்கை ஒன்று கொடுத்திருக்கிறது.

# ஐவர் சிறையில்!
## இன்று 53-வது நாள்

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை : 23—10—1953 வெள்ளி

# காட்டுமிராண்டித்தனம்!

வேலையில்லாத் திண்டாட்டம் விரிவாகிக்கொண்டே போகிறது! பட்டினிப் பட்டாளம் பெருகிக்கொண்டே இருக்கிறது!

மக்களின் வாங்கும் சக்தியோ தேய்ந்துகொண்டேபோகிறது! வாழ்க்கைக்கு இன்றியமையாப்பொருட்களின் விலையோ வேகமாகக் கூடிக்கொண்டே போகிறது!

'உற்பத்தி அதிகம்! வாங்குவார் இல்லை!' என்று ஆலை அரசுகள் கூறிக்கொண்டு, நெசவாலைகளை மூடி தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கிறார்கள். கைவசமுள்ள ஆடைகளை அன்னிய நாட்டுச் சந்தைக்கனுப்ப யூனியன் சர்க்காரிடம் சலுகைக் கேட்கிறார்கள்.

நெசவுக்கான நூல் ஏராளமாக உற்பத்தியாகி, ஆலைகளிலும், வணிக நிலையங்களிலும் குவிந்து கிடக்கிறது என்று, ஆலை அதிபர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள். அன்னிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதியும் பெற்று விட்டார்கள்.

'விளைச்சல் அமோகம்—அரிசி விலை குறைந்துகொண்டே போகிறது—அஞ்சற்க,' என்று ஆறுதலும், தைரியமும் ஊட்டப்படுகிறது; நடைமுறையோ, நேர்மாற்றமாக இருக்கிறது.

'காப்பிக்கொட்டை உற்பத்தி அதிகரித்துப் போய் விட்டது-ஏலம் கேட்க எவரும் முன்வரவில்லை-ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்யுங்கள்,' என்று, மூச்செடுத்துக் கூவி, வெளி நாட்டுக்குக் கப்பலேற்ற உரிமை பெற்றுவிட்டனர், காப்பிக் கொட்டை உற்பத்தியாளர்கள்.

உற்பத்தி பெருகி, சிந்துவார் அற்றுக் கிடந்தால், விலை வேகமாகக் குறைந்து விடுமென்பது பொருளாதார அரிச்சுவடி. முதலாளித்துவ உற்பத்தி முறையின் மூல தத்துவம் இதுதான்.

இந்தப் பொருளாதார அடிப்படைத் தத்துவத்திற்கு அப்பாற்பட்டதாகவும், கட்டுப்படாததாகவும் இருந்து வருகிறது, எல்லாவகை உற்பத்திப் பெருக்க விவகாரமும்.

ஆடை, அதிக உற்பத்தியாகி இருக்கிறது என்ற கூக்குரலைத்தான் கேட்கிறோம். விலை குறைந்து கிடக்கிறது என்ற மகிழ்ச்சிக் குரலை நாம் கேட்கவில்லை. ஆனால், 'உற்பத்தி அதிகம்; அன்னிய நாட்டுக்கு அனுப்ப அனுமதி வேண்டும்; ஆலைகளை மூடுகிறோம்; தொழிலாளர்களை அகற்றுகிறோம்,' என்ற அபாயக் குரல்தான் கிளப்பப்படுகிறது, ஆலை அரசுகளால்!

நூலும், அரிசியும், காப்பிக்கொட்டையும், காய்கறியும் இந்தக் கோலத்தில் விலை குறைவு காணாமல், வீங்கிய விலையோடு இருந்து கிடக்கின்றன.

பண்டிதரின் சர்க்காரோ, எதற்கெடுத்தாலும் 'ஐந்தாண்டுத் திட்டத்தைக் காணீர்—அனைத்துத் துயர் நீக்க அதற்குள் அருமருந்து உள்ளது தேரீர்!' என்று, ஏட்டுச் சர்க்கரை நீட்டிக் காட்டுகிறது.

'உற்பத்திச் செலவு குறைந்தால்தான், பொருள்களின் விலை குறையும்!—தொழிலாளர்களின் கூலியைக் குறைக்கிறோம்—விலைபொருள் ஏற்றப்படியில் கைவைக்கிறோம்' என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். தொழிலாளர் பற்றி செலவினக் கணக்குகளைக் காட்டுகிற ஆலை அதிபர்கள், தங்கள் 'லாபக் கணக்கு'க் காட்டி வாதிட முன்வர மறுக்கிறார்கள்.

இவர்களைத், தட்டிக் கேட்க ஆள் இல்லை. இருக்கிற ஆளோ, அவர்கள் பிடியில் குடுமியைக் கொடுத்துவிட்டு, விண்ணை அண்ணாந்து பார்க்கிறார். எந்தெந்த நாட்டில் சொந்தக் கொடி பறக்கிறது, எவர் எவர் தன்னைப் புகழ்ந்தேத்துகிறார்கள் என்று காதுகுளிரக் கேட்டு, உள்ளப் பூரிப்படைகிறார்.

விண்ணிலே மிதந்து வரும், காதொடிந்த ஊசி அளவும் நாட்டு மக்களுக்கு உதவி செய்ய வக்கற்ற, புகழ் முரசுகளைக் கேட்டு, பரவசங்கொண்டு, காலுக்கடியிலே பாய்ந்து செல்லும் வெகுஜன எதிர்ப்பு வெள்ளத்தை உணரவும் அறிவாற்றல் அற்றவராக இருக்கிறார் பிரதமர் பெருமகான். பாதத்தில் இருந்த வெள்ளம், கழுத்தளவு உயர்ந்திருக்கிறது என்பதை எப்பொழுதுதான் பண்டிதர் உணரப் போகிறாரோ நாம் அறியோம்.

எதிர்ப்புகளை எல்லாம், 'காட்டுமிராண்டித்தனம்' என்று சீற்றம் கொண்டு சித்தரிக்கிறார். எம்மையும், எம்முடைய ஆட்சித் திறத்தையும் அமெரிக்கர் போற்றுகின்றனர்; ஆங்கிலேயர் புகழ்கின்றனர்; ரஷ்யர் மகிழ்கின்றனர்; சீனர் பல்லாண்டு கூறுகின்றனர்; இருந்தாலும், உள்நாட்டவர் மட்டும் ஏனோ எதிர்ப்பு செய்கின்றனர், என்று, ஏதும் அறியாதவர்போல, பொதுமக்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்துகிறார், பண்டித ஜவகர்!

எதிர்ப்பை ஒடுக்கிவிட்டால், பொறுப்புத் தீர்ந்தது, ஆட்சிக் களியாட்டத்திலே அகமகிழ்ந்து கிடப்போம் என்று அவர் எண்ணிக் கிடக்கிறார்!

'ஆண்டவர்'களோ மக்கள் கொடுக்கும் பூஜைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, 'எனக்கென்ன? உனக்கென்ன? என்னை மட்டுமா அவர்கள் வணங்குகிறார்கள்? நீதான் உதவி செய்! நான் என் துணை செய்ய?' என்று சச்சரவு இட்டுக் கொண்டு இருக்கிறார்கள்!

மாநில சர்க்காரைக் கேட்டால், இந்தக் குறை களைய யூனியன் சர்க்காருக்குத்தான் அதிகாரம் என்று கையை விரிக்கிறது! தடி, துப்பாக்கி துணையை நாடுகிறது! யூனியன் சர்க்காரின் பொறுப்பான பிரதமரின் போக்கோ, 'காட்டுமிராண்டிகள்' என்று தேவையைத் தெரிவிக்கும் மக்களை ஏசுவதோடு திருப்தி கொண்டு விடுவதில் இருக்கிறது!

நமது 'ஆண்டவர்'களும் அப்படி—அமைச்சர்களும் இப்படி! எங்கே சென்று முறையிடுவது? எவரிடம் போய், நமது குறைகளுக்குப் பரிகாரம் தேடுவது?

சென்னை வீதிகளில் முப்பது உயிர்கள், பட்டினிக்குப் பலியாகிக் கிடக்கின்றன. 'அனாதை'ப் பிணங்களை அறுத்துக் கிழித்த மருத்துவர், 'பட்டினியால் அந்த முப்பது நிரபராதிகளும் இறந்தார்கள் என்று அத்தாட்சிச் சீட்டு கொடுத்திருக்கிறார்,

இவர்கள் இறக்கக் காரணம் என்ன? யார், இந்த அக்கிரமத்துக்குப் பொறுப்பு? 'நீ இல்லை, நான் இல்லை' என்று அமைச்சர்கள் சொல்லிவிட்டால் போதுமா? இந்தப் பொய்யுரை பரிகாரமாகி விடுமா?

உலகை ஏமாற்றலாம்; மக்களை ஏய்க்கலாம்: அமைச்சர்கள் தங்கள் நெஞ்சைக் கூடவா ஏமாற்றிவிட முடியும்?

'தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்த பின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்ற மெய்யுரையை அமைச்சர்கள் அறியார்களா?

பட்டினியால் முப்பது உயிர்கள் செத்து மடிந்து போய் இருக்கின்றனவே, மகா மகா நவீன நாகரீக மனிதரான பண்டித நேருவின் ஆட்சியில் நடைபெற்றதுதானே இது! 'காட்டுமிராண்டிகள்' ஆட்சியில்கூட இந்த அக்கிரமம் நிகழாதே! பண்டிதரின் ஆட்சியை காட்டுமிராண்டிகள் கட்சி என்றுகூட சொல்வதற்குப் பொருந்துமாறு இல்லையே!

காட்டுமிராண்டி ஆட்சியிலும் கேவலமான ஆட்சியாக அல்லவா பண்டிதரின் ஆட்சி இருக்கிறது? என்ன பெயர் கூறுவது இந்தக் கோமாளித்தன ஆட்சிக்கு? வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறோம்!

## சம்யுக்த மாராஷ்டிராத்துக்கு ஆக்கம்

### முன்னாள் காங்கிரஸ் செயலாளர் தேவின் ஆதரவு

பம்பாய், அக். 22—

"சம்யுக்த மாராஷ்டிர அமைப்புக்கு நாகபுரியில் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கை நல்லதோர் வழிகாட்டியாகும்,"

இவ்வாறு நேற்று, இங்கு நடைபெற்ற மாராஷ்டிரிய பிரமுகர்களின் கூட்டத்தில் கலந்துகொண்ட அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் செயலாளர் சங்கர்ராவ் தேவ் குறிப்பிட்டார்.

கூட்டத்தில், பல கட்சியைச் சேர்ந்தவர்களும், எந்த அரசியல் கட்சி தொடர்பு இல்லாதவர்களும், பல பகுதிகளில் உள்ளவர்களுமான மாராஷ்டிர முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டம் தேவ் தலைமையில் நடைபெற்றது.

மொழிவழி மாநில விஷயமாக முடிவுகட்ட யூனியன் சர்க்காரால் நியமிக்கப்பட இருக்கும் தனிச் சக்திக் குழு, 'மாசடைந்த உள்ளத்தோடும், முன்னரே முடிவிற்கு வந்த ஏற்பாட்டோடும், மாநிலம் உருவாக்கும் ஆராய்ச்சியில் இறங்காமல், தூய்மையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்' என்று தேவ் பேசும்போது மேலும் குறிப்பிட்டார்.

நாகபுரி உடன்பாட்டை ஆதரித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது

## வெற்றி! வெற்றி! மகத்தான விஞ்ஞான வெற்றி!

### சட்டைப் பைக்குள்ளே அடங்கிவிடும் 'சிறிய சர்க்கா'

சகிந்திராபாத், அக். 22—

ஐதராபாத் தொழில் மந்திரி விநாயகராவ் வித்தியலங்கார் முன்பாக, ஒரு சிறு புகைப்படம் எடுக்கும் கருவி அளவில் சட்டைப் பைக்குள் அடங்கும், ஒரு சிறு நூல் நூற்கும் ராட்டை ஒன்றை ஒருவர் தொழில் படுத்திக் காட்டினர்.

சாதாரண ராட்டையைவிட இரு மடங்கு நூலை குறிப்பிட்ட காலத்திற்குள் நூற்க முடிகிறது.

இப்புதிய ராட்டையை திருவாங்கூரைச் சேர்ந்த ஜோசூரியன் என்னும் 30 வயதினர் தயாரித்துள்ளார்.

இந்த சர்க்காவிற்கு ஐந்து சிறு உருளைகள் சுழலுகின்ற ஐந்து மெல்லிய அச்சாணிகளைக் கொண்டிருக்கின்றன. இரண்டரை அங்குல அகலமும், எட்டு அங்குல நீளமும் கொண்ட தகரப்பெட்டியில் இது அடங்கிவிடுகிறது.

வியாபாரத் துறையில் உற்பத்தியை நடைமுறைக்குக் கொண்டு வருவதாக இருந்தால், இந்த சர்க்காவின் மொத்தத் தயாரிப்புச் செலவு ரூ. 18-தான் ஆகும் என்று, அவர் சொல்லுகிறார்.

தற்போதைய முகாமில் தொழில் படுத்திக் காட்டுவதற்காக வசர்தாவுக்கு ஜோசூரியன் செல்லும்போதுதான் ஐதராபாத்தில் இந்த ராட்டைத் தொழில் திறத்தைக் காட்டினர்.

## இந்தியாவில் அந்நிய ஆதிக்கத் திட்டுகளில் வசிக்கும் மக்களின் விடுதலை இயக்கம்

### சர். சி.பி. ராமசாமி தலைமையில் விடுதலைக் குழுவாம்!

### பிரிட்டனுடன் இணைந்திருந்த பாபத்துக்குச் சரியான பரிகாரம்!

புதுடில்லி, அக். 23—

இந்தியாவிலுள்ள பிரெஞ்சு, போர்த்துகீசிய ஆதிக்கத்தின் கீழுள்ள திட்டுகளில் வசிக்கும் மக்களின் விடுதலை இயக்கம்பற்றி ஆலோசனை கூறி உதவ, சர். சி. பி. ராமசுவாமியைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியை, இந்திய ஓவர்சீஸ் செண்ட்ரல் அசோசியேஷன் நியமித்துள்ளது.

பிரெஞ்சு, போர்த்துகீசிய உடைமைப் பிரதேசங்களில், 7,00,000மக்கள் வசிக்கின்றனர்.

இந்தச் சங்கத்தின் காரியதரிசி தோழர் சி. எல். படேல், அகிம்சா முறையில் இயக்கம் நடத்தப்படும் என்றும், போர்த்துகீசிய, பிரெஞ்சுப் பொருள்கள் பகிஷ்காரம் ஆரம்பிக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

## கீழ் விசாரத்தில் தோழர் கோவிந்தசாமி, எம். எல். ஏ.,

தோழர் சி. ஏ. வரதராசன் தலைமையில் தி. மு. கழக பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தோழர் ரஷீத் ஆகியோர் 24-10-53 சனி மாலை 6-மணிக்கு சொற்பொழிவாற்றுவர்.

## சென்னை—விழுப்புரம் மின்சார ரயில்

கல்கத்தா, அக். 22—

சென்னை–தாம்பரம் மின்சார ரயில் பாதையை விழுப்புரம் வரை விஸ்தரிப்பது, சேலத்திலிருந்து பெங்களூருக்கு குப்பம் வழியாக புது ரயில் பாதை போடுவது ஆகிய முக்கிய திட்டங்களும் இன்னும் மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்.

ரயில்வே இலாகா உதவி மந்திரி ஒ. வி. அளகேசன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது மிக முக்கியமான திட்டமென்றும், அண்மையில் டெல்லியில் நடைபெற்ற ரயில்வே ஜெனரல் மாநாட்டில் இதுபற்றிப் பேசியதாகவும் அவர் சொன்னார்.

## தோழியர் சத்தியவாணிமுத்து

தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழியர் சத்தியவாணி முத்து அவர்களுக்கு, 21-10-53 இரவு 7–35 மணிக்கு, எழும்பூர் ஆஸ்பத்திரியில், பெண் மகவு பிறந்தது. தாயும், குழந்தையும் நலம்.

## "பரிதிமாற் கலைஞன்" நினைவு நாள்

மதுரை, அக். 21—

மதுரை நகர் வடக்காடி வீதியிலுள்ள மதுரை திருவள்ளுவர் கழகம், கம்பர் கழகம் இவைகளின் சார்பாக நேற்று 'பரிதிமாற் கலைஞன்' நினைவு நாள் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு எம். எம். ராமலிங்கராஜ தலைமை வகித்தார். ஔவை துரைசாமி பேசுகையில், 'பரிதிமாற் கலைஞன்', 1870-ல் பிறந்தார்; 1892-ல், கலைஞர் தேர்வில் தேறி.பி. ஏ. பட்டம் பெற்றார்; பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ்த் தொண்டு புரிந்தார்," எனக் குறிப்பிட்டார். மற்றும் பலர் பேசினர்.

## செந்தமிழ்ச் சிந்தனை மன்றம்

காரைக்குடி, அக். 22—

கலைக்காகவும், மொழிக்காகவும், திராவிட இனத்துக்காகவும் பாடுபடுவதென முடிவு செய்து, தோழர் லெ. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 'செந்தமிழ்ச் சிந்தனை மன்றம்' நிறுவப்பெற்றுள்ளது.

# ஜோதி வெங்கிடாசலம் நியமனம் ஜனநாயகமற்றது!

## விவாதிக்க உடனே சட்டசபையைக் கூட்டவும்!

### சென்னை கவர்னருக்கு தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவர் ஆ. இரத்தினம், எம்.எல்.ஏ., அவர்களின் கடிதம்

தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவரும், சென்னை சட்டசபை மெம்பருமான தோழர் ஆ. இரத்தினம், எம். எல். ஏ., அவர்கள், சென்னை கவர்னருக்கு, அக்டோபர் 17-ந் தேதியன்று கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பியுள்ளார்:—

"அத்யாவசியமான பல உடனடி விஷயங்களைக் குறித்து, விவாதிக்க வேண்டியிருப்பதால், சென்னை கவர்னர் அவர்களை உடனே சட்டசபையைக் கூட்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவ்விஷயங்களில் முக்கியமானவைகள்:—

1. தாழ்த்தப்பட்டோரின் சார்பில் திருமதி ஜோதி வெங்கிடாசலம் அவர்களை மந்திரியாக நியமித்தது பொறுப்பற்றதும், ஜனநாயக மற்றதுமாகும். இவ்வம்மையாரது கணவர், தான் ஆதிதிராவிடர் இல்லை என்று கூறிக்கொண்டிருந்ததாலும், எக்காலத்திலும், ஆதி திராவிட சமூகத்துக்குத் தொண்டே புரியாது தொல்லை விளைவித்து வந்திருப்பதாலும், எல்லா ஆதி திராவிடர்களுக்கும் எரிச்சலும், மனக் கொதிப்பும் உண்டாகியிருப்பதோடு, ஜனநாயகக் கொள்கைக்கு முரணாக பணக்காரர் மேலும் பணக்காரராகவும், ஏழை மிகவும் ஏழையாகவும் இருப்பதே அரசாங்கத்தின் கொள்கை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது;
2. 'அரிஜன நல இலாகா'வை, தாழ்த்தப்பட்டோரல்லாத ஓர் கோவை மாவட்ட பணக்காரரிடம் ஒப்படைத்திருப்பது;
3. சட்டசபையில் தோல்வியுற்ற புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை, சிரத்தையோடு, சர்வாதிகார முறையில் அமுலில் கடைபிடிப்பது.
4. 20:3 என்ற விகிதத்தில், தாழ்த்தப்பட்டோர் விண்ணப்பதாரர்களுக்கு, சர்க்கார், உத்தியோகம் தரவேண்டும் என்ற கொள்கை இப்போது காற்றில் விடப்பட்டிருப்பது
5. போதிய பணமில்லையென்று கூறி, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பள்ளி, கல்லூரி விடுதிகளிலிருந்து வெளியேறும் போது அசிரத்தையாக இருப்பது.

இன்னும் பல முக்கிய விஷயங்களை—அவசரமான நிலையில் விவாதிக்க வேண்டியிருப்பதாலும், மேலும் சட்டசபை கூடி பல மாதங்களாகின்றதாலும், கவர்னர் உடனடியாக சட்டசபையைக்கூட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

குறிப்பு:—கவர்னருக்கு அனுப்பப்பட்ட இக்கடிதத்திற்கு, சட்டசபையைக் கூட்டும் விஷயத்தைக் கவனிக்க முதலமைச்சருக்கு, கவர்னர், குறிப்பு அனுப்பியுள்ளார் என்று, கவர்னரின் பிரத்தியேகக் காரியதரிசியிடமிருந்து, அக்டோபர் 20-ந் தேதியன்று பதில் வந்திருக்கிறது.

# ஓராண்டு காலமாக கடலில் காலங் கழித்த நாடோடி!

## 'தாய் நாடு' எனத் தனக்கில்லாதவரின் சோகக் கதை!

ரியோ, அக். 21—

தனக்கென சொந்தத்தில் ஒரு 'தாய் நாடு' இல்லாத மைகேல் பெட்ரிக் ஒருபரின் என்பவர் வியாழக்கிழமை, ஒரு பிரெஞ்சுக் கப்பலில் வந்து இங்கு இறங்கினார். இவர் சென்ற ஓராண்டு காலத்துக்கு மேலாகவே எந்த நிலப்பரப்பிலும் கால்வைக்க முடியாமல் கடலிலேயே அல்லல்பட்டுக்கொண்டு கிடந்தார். இவர், இங்கிருந்து விமான மூலம் டொமினிசன் ரிபப்ளிக் பிரதேசத்துக்கென்று காலங் கழிப்பார்.

320 நாட்கள், இவர், ஆங்காங் துறைமுகத்திற்கும், மகாசா துறைமுகத்திற்கும் இடையில் உள்ள கடலில் சிறு படகு ஒன்றில், அங்கும் இங்கும் அலைந்துகொண்டு இருந்தார்.

பிரிட்டிஷ் அதிகாரிகளோ, போர்ச்சுகல் அதிகாரிகளோ தங்களுடைய பூமியில் கால் வைக்க, இவரை அனுமதிக்கவில்லை.

அகில உலக அகதிகள் சங்கம், இவரை இரண்டு மாதங்களுக்கு முன் அந்தப் படகில் இருந்து மீட்டு, பிரேசில் பிரதேசத்தில் இறக்கிற்று. இவர் வைத்திருந்த அடையாள அறிக்கைகள் ஒழுங்காக இல்லாததால், பிரேசிலும் இவரை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

இவர், ரியோவில் இறங்கினதற்கும், ஒரு பெட்ரால் ரீதியிரியின் உத்திரவுதான் உதவியாக இருந்தது!

# கம்யூனிஸ்டு எதிர்ப்பு - பயங்கரவாதிகள்

## கிழக்கு ஜெர்மனியில் சல்லடை போடப்படுகிறது!

பெர்லின், அக். 22—

தெற்கு பெர்லின் பகுதியைச் சேர்ந்த நான்கு கம்யூனிஸ்டு போலீஸ்காரர்களை, கம்யூனிஸ்டு எதிர்ப்பு பயங்கரவாதிகள் கொன்றுவிட்டார்கள் என்றும், அதற்காக, பயங்கரவாதிகளைப் பிடிக்க விரிவான சோதனை போடப்பட்டது என்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

இதுபற்றிய கிழக்கு ஜெர்மன் போலீஸ் அறிக்கையொன்று மேற்கத்திய அரசுகளின் தூண்டுதலினால், ஆயுதம் தரித்த பாசிஸ்ட் பயங்கரவாதிகள் இக்காரியத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறுகிறது. ஜூன் 17-ந் தேதி நடைபெற்ற ஜெர்மன் கிளர்ச்சிக்குப் பிறகு, முதல் முதலாக இந்த எதிர்ப்புச் சம்பவத்தை, தான் ஒப்புக்கொண்டு கி. ஜெர்மன் சர்க்கார் அறிக்கை வெளியிட்டு இருக்கிறது.

# கோத்திரத்தின் குணம்!

"திராவிட முன்னேற்றக் கழகங்களின் நடவடிக்கைகள் முட்டாள்தனமானவைகள்."

—கல்கத்தாவில்
அனந்தசயனம் அய்யங்கார்.

## ஆண்டு விழா

சென்னை, அக். 23—

சென்னை இலட்சியமன்ற ஆண்டு விழா 24—10—53 அன்று, கொண்டித்தோப்பு, காசிவிசுவநாதர் கோயில் முன்னிலையில் நடைபெறும் நடிப்பு புலவர் கே. ஆர். ராமசாமி விழாவிற்குத் தலைமை வகிப்பார். நடிகச் செல்வம் எஸ். எஸ். ராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, கெஜபதி (ரெட்டியார்) எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன், வி. முனுசாமி ஆகியோர் கலந்துகொள்வர். சிறை சென்ற சி. ஆர். பாலசுந்தரம் குழுவினருக்குப் பாராட்டு நடைபெறும்.

# இந்நாட்டு 'மன்னர்கள்' 30 பேர் மாண்டனர்!

## கவனிப்பாரற்று பசிக்குப் பலியாயினர்

சென்னை, அக். 22—

பலதரப்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டு, இம்மாதத் துவக்கத்திலிருந்து, நேற்று வரை, 30 அனாதைகள் மடிந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கால்களில் கட்டுகளுடன், ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எதிரிலுள்ள நடைபாதைகளில் கிடந்த இருவரில், ஒருவர் மடிந்து விட்டார் என்றும் சொல்லப்படுகிறது. மற்றொருவரும் சற்று நேரத்தில் இறந்துவிட்டார்.

# 'ஆயுதங்கள் ஒழிய வேண்டும்; அறமுறை கையாளப் படவேண்டும்'

## மாங்கீரில் விநோபாபாவே

மாங்கீர், அக். 20—

"அச்சத்தின் காரணமாக, ஆயுதப் பெருக்கம் செய்து வரும் நாடுகள், தமது பயத்தினை உதறித் தள்ளி, திருத்து பிறந்த நாள் விழா வன்று, தமது போர்க் கப்பல்களை மூழ்கடிக்க தாங்களாகவே முன்வரவேண்டும்,"

என்று, ஆச்சாரியா விநோபா பாவே கூறியுள்ளார்.

ஒருவரை ஒருவர் அழிப்பதற்காக, ஆயுதப் பெருக்க முயற்சி வேகத்தில் தொடர்ந்து ஈடுபடுவதை விட, இந்த நடவடிக்கை சிறந்ததென அவர் குறிப்பிட்டார்.

அச்சமின்மை, சமத்துவம், சமுதாய உணர்வு இவைகளே இன்றைய நாட்டுக்குத் தேவை யென மேலும் குறிப்பிட்டார்.

எவருடைய சார்பில் உண்மை இருக்கிறதோ, அவர்களே, வெற்றியுறுவரென்றும் அவர் குறிப்பிட்டார்.

# 'சசார் ராஜினாமா நாள்' கொண்டாட முடிவு!

## பஞ்சாப் ஜனசங்கத்தின் அறைகூவல்!

ஜலந்தர், அக். 22—

பஞ்சாப் பிரதம மந்திரி பீம்சேன் சசார், பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், அந்தக் கோரிக்கையை வலியுறுத்த, வருகிற ஞாயிற்றுக் கிழமையை, "ராஜினாமா நாளாக"க் கொண்டாட வேண்டும் என்று பஞ்சாப் ஜனசங்கம் கோரிக்கை வெளியிட்டிருக்கிறது.

அகாலி சங்கம் வளருவதற்கே, சசார் மேற்கொண்டுள்ள, 'அறிவற்ற பலயீனமான' போக்கே காரணம் என்று சங்கம் கூறுகிறது. இந்த சங்கம் இந்துமத வெறியர்களைக் கொண்ட அரசியல் கட்சியாகும்.

# வ. மே. எல்லைப்புற மந்திரி மீது நம்பிக்கையில்லை

## தீர்மானம் கொண்டுவர ஏற்பாடு ஆகிறது!

லாகூர், அக். 22—

பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப்புற மாநில சர்க்காரில் உள்ள சுகாதார மந்திரி சேம்சுல்அக் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறதாக ஒரு செய்தி அறிவிக்கப்படுகிறது.

அப்துல் குலாம்கானுடன் நெருங்கிய தொடர்புள்ள மியான் ஜாபர்ஷா இந்த முயற்சியின் முகமூடி என்று சொல்லப்படுகிறது.

## பாராளுமன்ற உறுப்பினர்கள் திண்டாட்டம்

அவுரங்காபாத், அக். 21—

காஷ்மீருக்குச் சென்ற 16 பாராளு மன்ற உறுப்பினர்கள் பனியால் அவதியுற்று தொல்லைக் காளானார்களாம்.

அமரநாத் ஆலயத்தை நோக்கி அவர்கள் நடந்து செல்லுகையில், பாதை, பனியால் மூடப்பட்டு விட்டதால், அவர்கள் வழி தெரியாமல் திண்டாடினராம்.

இதனால், ஒருவருக்கு காது செவிடாகவும், மற்றொருவருக்கு கால்கள் முடங்கியும், போய் விட்டதாகச் சொல்லப்படுகிறது.

அனைவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சென்னையில் புரூட்டஸ், விஜயா, ராணி, மெரீனா

## துப்பறியும் திறமையால் நால்வர் கைது

சென்னை, அக். 22

சென்னையில் நேற்று இரவு முதன் முறையாக போலீஸ் ரோந்து வேலையில் துப்பறியும் நாய்கள் சுற்றியதால் நான்கு பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

கத்தி வைத்திருந்தோனையும், சாராயப் புட்டிகளை ஒளித்து வைத்திருந்தோனையும் இந்த நாய்கள் கண்டு பிடித்தன.

சென்னை போலீஸ் இலாகாவில் இருக்கும் 'புருட்டஸ்' என்ற பெயருடைய நாய், 1½ ஆண்டு காலமாக துப்பறியும் வேலைக்கே பயிற்சி பெற்று வருகிறது. இது ஆண் நாய்.

விஜயா, ராணி, மெரீனா ஆகிய பெண் நாய்களும் கடந்த இரண்டு மாத காலமாக துப்பறியும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

## "ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்க வேண்டும்"

### ஆசிரியர் மாநாட்டின் சிபாரிசு

சென்னை, அக். 22—

சென்னை மாநில, மாவட்ட ஆசிரியர்கள், செயலாளர்கள், தலைவர்கள், பிரதிநிதிகள் சென்ற வாரம் சென்னையில் கூடி, செகண்டரி கல்வி கமிஷனின் சிபாரிசுகளைப் பற்றி விவாதித்தனர்.

இவர்களுடைய சிபாரிசுகள் பிறகு பொது மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டன.

பல்கலைக் கழக நிர்வாகமும், போதனையும் ஆங்கிலத்திலிருக்க வேண்டும் என மாநாடு சிபாரிசு செய்தது.

உதவி தேவையாக உள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்கள் 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கக் கூடாதென்ற தடை நீக்கப்படவேண்டுமென்று மாநாட்டில் முடிவாயிற்று.

மாணவர்கள் அரசியலில் பங்கெடுக்கக் கூடாதெனவும் முடிவு செய்யப்பட்டது.


## ஏஜண்டுகள் தேவை

"நம் நாடு" விற்பனை செய்ய கீழ்க்கண்ட ஊர்களில் முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விபரங்கட்கு எழுதவும்:

பாபநாசம்
புவனகிரி
பேராவூரணி
கோள்ளிடம்
மங்கலவூர்
பெரியகுளம்
குமாரபாளையம்
பவானி
ஸ்ரீவைகுண்டம்
மானாமதுரை
சங்கரநயினார்கோவில்
சத்தியமங்கலம்
திருப்பத்தூர் (R. D.)
தனுஷ்கோடி
தாராபுரம்
ஜோலார்பேட்டை

மேனேஜர்,
நம் நாடு

# காரைக்குடியில் இராம-சுப்பையாவுக்கு பாராட்டு

## திருப்புத்தூர், பாகனேரி கழகங்களும் பங்கேற்றன

காரைக்குடி, அக். 18—

“ஜனநாயக அரசியல் என்பது நடைமுறைக்கு வரும்போது, எதிர்க் கட்சிக்காரர்களும் இருந்தால்தான், ஆளும் கட்சியினர் தங்களது குறைகளை உணர முடியும். எதிர்க் கட்சியே கூடாதென அழிக்க முயல்வது குடியாட்சி முறையையே குழி தோண்டிப் புதைப்பதாகும்.”

“தி. மு. கழகத் தலைவர்களையும், தொண்டர்களையும், சிறையில் அடைத்து வைக்க முடியுமே தவிர, அவர்களின் இலட்சியங்களையும், எண்ணங்களையும் சிறையிட முடியாது,”

—இவ்வாறு தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், காரைக்குடியில் இராம-சுப்பையாவுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லக்குடி அறப்போரில் பங்கேற்று, இரண்டாவது படைக்குத் தலைமை தாங்கிச் சென்று, மூன்று மாத தண்டனை பெற்று விடுதலை அடைந்த தோழர் இராம-சுப்பையா அவர்களுக்கு, இன்று மாலை ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு தோழர் கண்ணதாசன் அவர்கள் இல்லத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் கழகத் தோழர்களுடனும், ஏராளமான பொது மக்களுடனும் புறப்பட்டு, முத்துப்பட்டணம், முத்தூரணி, செக்காலை ரோடு, கல்லுக்கட்டி மெ. மெ. வீதி, கீழ ஊரணி வழியாகச் சென்று, மாலை 6-30 மணிக்கு செஞ்சை திடலை அடைந்தது.

தோழர்கள் கண்ணதாசனும், இராம-வெள்ளையனும் தலைமை தாங்கி, ஊர்வலத்தை நடத்திச் சென்றனர். ஊர்வலத்தில், தோழர்கள் கோவிந்தசாமி எம். எல். ஏ., அருப்புக்கோட்டை எம் எஸ். இராமசாமி, எஸ். வி. வி. லிங்கம், இராம-சுப்பையா ஆகியவர்களும், தேவகோட்டை, திருப்புத்தூர், கோட்டையூர், தொண்டி, பாகனேரி தி மு. கழகக் கிளைக் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

தி. மு கழகத்தின் முன்னேற்றம் காரணமாக ஆத்திரமடைந்த தேசிய இளைஞர் முன்னணியைச் சேர்ந்த காங்கிரஸ் கனபதிகள் சிலர் ஊர்வலத்தில் குழப்பம் விளைவித்துக் கலைத்துவிட முன்னேற்பாடு செய்திருந்தும், பொது மக்கள் ஆர்வம் காரணமாக, ஏதும் செய்ய முடியாமல் ஏமாந்தனர். தோழர் இராம-சுப்பையாவிற்கு பொது மக்களால் வழி நெடுக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டம், தோழர் எஸ். வி. வி. லிங்கம் தலைமையில் துவங்கிற்று. தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், சொற்பொழிவாற்றத் தொடங்கினார். அவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது காங்கிரஸ் கூலிகள் சிலர் மேடை அருகே வரும் கூச்சல் போட்டு குழப்பம் விளைவித்தும் கூட, பொறுப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுமக்கள், மிக அமைதியாக அமர்ந்து பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

தோழர் இராம-சுப்பையாவிற்குப் பல மன்றங்களின் சார்பாக மலர் மாலைகளும், வாழ்த்துப் பாக்களும் குவிந்தன. கூட்டம் இரவு 8 மணிக்கு முடிந்தது.

## மற்ற ஊர்களில்:

வள்ளனூர், அக். 20—

கல்லக்குடி அறப்போராட்டத்தில் கலந்து சிறை சென்று 15—10—53ல், சிறைமீண்ட தோழர் மா. முருகேசன் அவர்களுக்கு, 18—10—53-ல், ஓர் பாராட்டுக் கூட்டம், வெள்ளனூரில், ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, புதுக் கல்வித் திட்டத்தைப் பற்றியும், அரசாங்கத்தின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், சிறைமீண்ட தோழரைப் பாராட்டியும், தோழர்கள் எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன், ஏ. பி தர்மலிங்கம், சிற்றுனி சுப்பிரமணியம் முதலியோர் பேசினர் முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### காஞ்சீபுரம்

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு, 6 வாரம் சிறைத் தண்டனை பெற்று, 15—10—53ல், கடலூர் சிறையிலிருந்து விடுதலைபெற்ற காஞ்சீபுரம் தோழர்களான, மு. கச்சபாலையம், டி. கலைச்செல்வன், கே. பஞ்சாட்சரம், வ. ஆர் விஜயன், எம். ராமச்சந்திரன், பாலகிருஷ்ணன், கண்ணன, டி. சேகரன், என். கோபாலன், வரதராசன், மாரிமுத்து, ஆறுமுகம், ஆகியவர்களுக்கு, நகர தி.மு.கழக சார்பிலும், சண்முகம் நினைவு மன்றம் (தி. மு. க. கிளை) சார்பிலும், கீழண்டை இராச வீதியில், 18—10—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் இ. எத்திராச தலைமையில் பாராட்டு கூட்டம் நடைபெற்றது. சிறை சென்ற தோழர்களைப் பாராட்டி தோழர்கள் கல்லூரி மாணவன், ராமநாதன், இரா. வெங்கடேசன், சி. கே ஏகாம்பரம், பி கச்சபாலையம், சி வி.எம். அண்ணாமலை ஆகியோர் பேசினர். தோழர்களுக்கு பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது. நகர தி. மு. கழகம், சண்முகம் நினைவு மன்ற சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. இரவு உணவு சண்முகம் நினைவு மன்றத்தின் சார்பில், சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் இல்லத்தில் அளிக்கப்பட்டது.

### செயங்கொண்டம்

கல்லக்குடி அறப்போரில் கலந்துகொண்டு 3 மாத சிறை தண்டனை பெற்ற தோழர் எம். வேணுகோபால் அவர்கள் 15-10-53ல் திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலை பெற்று, 16—10—53 மாலை 5-மணிக்கு செயங்கொண்டம் வந்தடைந்ததும், தி. மு. கழகத் தோழர்களால் மலர் மாலை சூட்டப்பட்டு, பங்களாவிலிருந்து இலட்சிய முழக்கத் தோடு கடைவீதி வழியே ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

### பொன்னமராவதி

கல்லக்குடி போராட்டத்தில், சிறை சென்ற தோழர் காரை. நல்ல மணியைப் பாராட்ட, 17—10—53-ல், தோழர் மு இளம்வழுதி தலைமையில், பொன்னமராவதி அண்ணா திடலில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், “நாழியர்கள் அருண்மொழி பி ஓ. எல்., பூங்கோதை, மணிமாறன் ஆகியோர் சிறை மீண்ட தோழரைப் பாராட்டிப் பேசினர்.

### தாவிசெட்டிபாளையம்

ஊத்துக்குளி, அக். 20—

5—10—53-ல், திருப்பூரில், ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டி, இரண்டு வாரம் சிறை சென்ற தோழர்கள்: ச. சரவணமுத்து, ப. சண்முகம் ஆகியவர்கள் 19—10—53-ல் விடுதலை அடைந்தனர். 20-10-53 அன்று ஊத்துக்குளி தோழர்கள் சிறை மீண்ட தோழர்களுக்கு மலர்மாலை அணிவித்து தோழர் ப முருகேசன் தலைமையில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். தோழர் ப. முத்து அவர்கள் இல்லத்தில் விருந்து உபசாரம் நடைபெற்றது.

# திருச்சி தி. மு. க. தோழர்கள் வழக்கு

திருச்சி, அக். 22—

21—10—53-ல் திருச்சி டவுன் பெஞ்சு மாஜிஸ்திரேட் கோர்ட்டில், 7-வது முறையாக, நகர துணைச் செயலாளர் தோழர் சு. அருணகிரி, மற்றும் மலைக்கோட்டை தி. மு. கிளை கழகத் தோழர்களான ஆர். முத்து, ச. கந்தசாமி, சி. கல்யாணசுந்தரம், சி. நாராயணன், வெ. பஞ்சாபிகேசவன், ரா. கிருட்டிணமூர்த்தி, சொ. கிருட்டிணமூர்த்தியும், கல்லக்குடி அறப்போர் வழக்கில் 3 மாத சிறை புகுந்து விடுதலை எய்திய தோழர்கள் டி. எம். ரத்தினம் டி. எ. கமலன் இருவர் உள்பட விசாரணை செய்துவிட்டு, வழக்கை மீண்டும் 8-வது முறையாக, 11—11—53-ந் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்கள். வழக்கின்போது, கழகத் தோழர்களுக்காக, வழக்கறிஞர் தோழர் இ. எ. திருவேங்கடம், பி. ஏ., பி. எல்., வந்திருந்தார்.

# தீண்டாமையை ஒழித்துக்கட்ட ஒரிஸா சர்க்கார் முயற்சி

## மனமாற்ற பிரசாரத்தை மேற்கொள்ள ஏற்பாடுகள்

கட்டாக், அக். 22—

ஒரிஸாவிலுள்ள 25 லட்சம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், 28 லட்சம் ஆதிவாசிகளுக்கும் (ஒரிசர்கள்) சரிசமத்துவ தகுதி ஏற்படுத்தி, தீண்டாமையை அடியோடு ஒழித்துக்கட்ட ஒரிசா சர்க்கார் தீவிர சிரத்தை எடுத்துக்கொண்டுள்ளது.

இதற்காக இந்திய சர்க்கார் ரூ. 3 லட்சம் அளித்துள்ளனர். ஒரிசா சர்க்கார், தங்கள் பங்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கியுள்ளனர். பொதுமக்களின் மனமாற்றத்திற்கான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

தீண்டாமையை ஒழிக்க, ஏற்கனவே ஒரிசாவில், சட்டம் செய்தாகிவிட்டது; ஆனால் பொது ஜன ஒத்துழைப்பின்றி சட்டத்தின் மூலம் மட்டும், இது சாத்தியமாகக் கூடிய காரியமல்ல.

### எச்சரிக்கை!

லண்டன், அக். 22—

பென்சிலின், ஸ்டிரெப்டோமிஸின் ஆகிய மருந்துகளை, எதற்கெடுத்தாலும் கொடுக்கப்பட்டு வருவதால், அந்த மருந்துகள் வேலை செய்யாத அளவுக்கு, மக்கள் உடம்பில் எதிர்ப்பு ஏற்பட்டு வருகிறதென்று, பிரிட்டிஷ் டாக்டர் ஒருவர் எச்சரித்திருக்கிறார்.

### அணுசக்தி பீரங்கிகள்

ஐரோப்பாவுக்கு, அமெரிக்கா ஏற்றுமதி

நியூயார்க், அக். 22—

அமெரிக்கா, அணுசக்தி பீரங்கிகளை ஐரோப்பாவுக்கு அனுப்பி வைக்க இருக்கிறது. இதன் காரணமாக ஐரோப்பாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை, நாளடைவில் கணிசமான அளவுக்குக் குறைக்கப்படலாம்.

### அலுமினியம், இந்தியாவின் சுயதேவை பூர்த்தி

திருவனந்தபுரம், அக். 21—

ஆல்வாயிலுள்ள இந்திய அலுமினியம் கம்பெனி தொழிற்சாலையில், அலுமினியத்தாலான கம்பிகள், குழாய்கள் செய்யப்படவிருக்கிறது. விமானங்கள், இதர லேசான நிர்மாண வேலைகளுக்கு இவை மிகவும் தேவையானவைகளாம். இவை இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும். இந்தியாவின் சுயதேவையைப் பூர்த்தி செய்யப்படுமெனத் தெரிகிறது.

# இந்தியாவின் ஏற்றுமதி—இறக்குமதி கொள்கையில் அதிருப்தி

## மாற்றம் வேண்டுமென மலேயா விருப்பம்

“வர்த்தகத் துறையில், இந்தியா, தன்னல நோக்குடன் நடந்து கொள்கிறது. இந்தியா—மலேயா வர்த்தகம் இன்னும் தாராளமாக நடைபெற வேண்டும்,” என்று மலேயா வர்த்தகர் ஒருவர் கூறியுள்ளார்.

* * *

“ஆசியாவின் தலைமைப் பதவியை ஏற்கும் பொறுப்பு இந்தியாவிடம் இருந்தபோதிலும், இங்குள்ள இந்தியர்கள், இந்திய மனப்பான்மையுடனேயே இருந்து வருகின்றனர். மலேயாவில் பிறந்த இந்தியனிடத்தில் மலேயா மனப்பான்மையைக் காணோம்,” என்று, மலேயா அரசியல்வாதி ஒருவர் கூறியுள்ளார்.

### இந்திய விவசாயத் தொழிலாளர்கள்

வரவழைக்க பீஜி முடிவு

சோமியா, அக். 21—

விவசாய, சுரங்க வேலைகளுக்கு இந்தியத் தொழிலாளர்களை உபயோகிக்கும் திட்டத்தை பீஜி சர்க்கார் ஆதரிக்கிறதென்று சர்க்காரின் பொதுச் செயலாளர் இன்று புது கவுன்சிலில் அறிவித்தார்.

ஆரம்பத்தில் 10-லிருந்து 20 குடும்பங்களையும், 20 தொழிலாளர்களையும் கொண்டு இத்திட்டம் பரீட்சித்துப் பார்க்கப்படுமென்று அவர் அறிவித்தார். 3 வருஷங்களுக்குப் பின், அவர்கள் சொந்த நாட்டிக்குத் திருப்பி அனுப்பப்படுவோர்கள் என ஒப்பந்தம் செய்யப்படும்.

### புதிய கல்வித் திட்டம்

கோரநாட்டு பஞ்சாயத்து போர்டு கண்டனம்

கும்பகோணம், அக். 20—

கோரநாட்டுக் கருப்பூர் பஞ்சாயத்து அலுவலகத்தின் சாதாரணக் கூட்டம் 14—10—53-ல், பஞ்சாயத்து அலுவலகத்தில், தோழர் ஜி. நாராயணசாமி தலைமையில் கூடியது. அதுபோது, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஐதராபாத்தில் ஒரு ‘தனலட்சுமி’

## ஏழாண்டுகளாக உணவு உட்கொள்வதில்லையாம்

சிக்கந்திராபாத், அக். 21—

ஐதராபாத்தில் 20 வயதான மாணிக்கம்மையார் என்ற அரிஜனப்பெண், ஏழு ஆண்டுகளாக எவ்வித உணவின்றி, தண்ணீர்கூட குடிக்காமல் இருக்கிறாராம். இவர் மலஜலம்கூட கழிப்பதில்லையாம்.

ஐதராபாத்தைச் சேர்ந்த டாக்டர் இவரை மூன்று நாட்கள் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, உடலில் கோளாறு இல்லையென்று சொல்லிவிட்டாராம்.

### விறுவிறுப்பு வேண்டுமே!

லண்டன், அக். 22—

“இந்திய சினிமாப் படங்கள், மேற்கு மார்க்கெட்டுகளைக் கைப்பற்ற வேண்டுமானால், படங்களிலுள்ள பாட்டுகளைக் குறைத்து, விறுவிறுப்பு அதிகம் ஏற்படும்படி செய்தாக வேண்டியது அவசியம்,” என்று தோழர் பி டி. கார்கா கூறியுள்ளார்.

# “ஆலையூரார்களுக்கு குனிந்து கொடுக்கிறது நேரு சர்க்கார்”

## பிரகட கோட்டையா கூறுகிறார்

விஜயவாடா, அக். 21—

நெசவாளர் பிரச்சினையைத் தீர்க்க இந்திய சர்க்கார் உடனடியாக நல்ல பலன் தரத்தக்க நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், அபாயகரமான நிலை ஏற்பட்டுவிடுமென்று எச்சரித்து, ஆந்திர கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் செயலாளர் பிரகட கோட்டையா எம். எல். ஏ. இன்று அறிவித்துள்ளார்.

மில்களில் அதிகப்படியான துணிகள் தயாரிப்பதற்கு தண்டனை தராமல், வரிவிதிப்பது ஆலையூரார்களுக்கு நேரு சர்க்கார் குனிந்து கொடுப்பதைப் போன்றது என்ற பொருள்பட தோழர் கோட்டையா கூறுகிறார்.

### உதகையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

19—10—53-ல், தி. மு. கழக சார்பில், போஸ் மைதானத்தில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: ஈ. க. மணி இயக்கப் பாடல்கள் பாடினார்; தோழர் சே. சு. ஆகன் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் யூசுப், ஈ. க. மணி, கோவை கே. எம் தங்கவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பழனி தி. மு. கழக செயற்குழு கூட்டம்

18—10—53-ல், கழக கட்டடத்தில் நடந்த தி. மு. கழக செயற்குழு கூட்டத்தில், திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், அரியலூர், கல்லக்குடி வழக்குகளை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தைக் கோரியும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திருத்தம்

சென்னை, அக். 21—

43-வது வட்டம் தி. மு. கழக சார்பில், மீர்சாகிப்பேட்டை, வெங்கிடாசல முதலி தெருவில், 13—10—’53-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் மா. பொ. வேதாசலம் அவர்களும் பேசியுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில், அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.